**ஆகஸ்ட் – 20**

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2026 – சுகாதாரத் துறை




- ❖ தமிழ்நாடு முதலமைச்சரின் முதியோர் காப்பீட்டுத் திட்டத்தை அரசு தொடங்க உள்ளதுடன், இது 70 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சுமார் 38 லட்சம் மூத்த குடிமக்களை உள்ளடக்கியதாகும்.
- ❖ இத்திட்டமானது வருமான உச்சவரம்பு ஏதுமின்றி, அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சை தொகுப்புகள், மேம்பட்ட இருதய அறுவை சிகிச்சைகள், உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மற்றும் உயர்நிலை நோயறிதல் சேவைகள் உள்ளிட்ட இலவச மருத்துவ சிகிச்சைகளை வழங்கும்.
- ❖ தற்போதைய மற்றும் எதிர்கால சுகாதாரச் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் 87 ஆண்டுகள் பழமையான 1939 ஆம் ஆண்டின் தமிழ்நாடு பொதுச் சுகாதாரச் சட்டம் மாற்றப்பட்டு, அதற்குப் பதிலாக ஒரு நவீன, விரிவான சட்டம் கொண்டுவரப்படும்.
- ❖ மருத்துவமனைகளுக்கு வெளியே மருத்துவக் கண்காணிப்பற்ற முறையில் வீடுகளில் நடைபெறும் பிரசவங்களை தண்டனைக்குரிய குற்றமாக மாற்றும் புதிய விதிமுறைகள் கொண்டு வரப்படும்.
- ❖ நாட்டின் சுகாதாரத் தலைநகரமாக அறியப்படும் தமிழ்நாடு, மருத்துவ சேவைகள், ஆராய்ச்சி, மருத்துவ சுற்றுலா மற்றும் ஆயுஷ் (AYUSH) ஆகியவற்றை உள்ளடக்கிய உலகத்தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த மருத்துவ மையமான 'TN மெடிசிட்டி' (TN Medicity) ஒன்றை நிறுவும்.
- ❖ 1,257 அரசு சுகாதார நிலையங்கள் வாயிலாக 30 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைவருக்கும் ஆண்டுதோறும் 14 அடிப்படை பரிசோதனைகளை இலவசமாக வழங்கும் 'நலம் 360 – அனைவருக்கான வருடாந்திர இலவச முழு உடல் பரிசோதனைத் திட்டம்' அறிமுகப்படுத்தப்படும்.

- இந்தப் பரிசோதனைகளில் இரத்த அழுத்தம், ECG, ஹீமோகுளோபின், முழுமையான ஹீமோகிராம், சீரற்ற இரத்த சர்க்கரை, யூரியா, கிரியேட்டினின், மொத்த கொழுப்பு, சீரம் பிலிரூபின், சிறுநீர் அல்புமின் மற்றும் VIA பரிசோதனை ஆகியவை அடங்கும்.
- மாநிலத்தில் முதல் முறையாக, பொது-தனியார் கூட்டாண்மை (PPP) மாதிரியின் மூலம் பெருநகரப் பகுதிகளில் வீடு தேடி வரும் நோயறிதல் சேவைகள் வாயிலாக மாதிரிகள் சேகரிப்பு மற்றும் பரிசோதனை வசதிகள் வழங்கப்படும்.
- சமூகம், குடும்பம் மற்றும் தனிநபர் அளவிலான முழுமையான ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, நலம் 360 அலைபேசி செயலியின் ஆதரவுடன் சுகாதாரத் துறை ஒரு 'நேர்மறை சுகாதாரக் கொள்கையை' அறிமுகப்படுத்தும்.
- உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சேவைகளை வழங்கும் மாநில முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களை உருவாக்குவதற்காக 'சுகாதாரப் பராமரிப்பில் மாநில முக்கியத்துவம் வாய்ந்த தமிழ்நாடு நிறுவனங்கள் சட்டம்' எனும் புதிய சட்டம் அறிமுகப் படுத்தப்படும்.
- தமிழ்நாடு முதன்முறையாக, மாதவிடாய் நிற்கும் தருவாயில் (பெரி-மெனோபாஸ்) உள்ள பெண்களின் உடல் மற்றும் மனநலத் தேவைகளை முன்கூட்டியே கண்டறிவதோடு, பரிசோதனை, ஆலோசனை மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்குவதற்கான 'பெரி-மெனோபாசல் பராமரிப்புக் கொள்கையை' வகுக்கும்.
- இக்கொள்கையின் கீழ், அறிகுறிகள் மதிப்பீடு, அடிப்படை பரிசோதனைகள், ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் தேவைப்படுவோரை மாவட்டத் தலைமை மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குப் பரிந்துரைப்பதற்காக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரந்தோறும் ஒரு குறிப்பிட்ட நாளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.
- கர்ப்பிணிப் பெண்களின் இரத்த அழுத்தத்தைக் கண்காணிக்க புளூடூத் வசதி கொண்ட இரத்த அழுத்தக் கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டு, சரியான நேரத்தில் சிகிச்சையளிப்பதை எளிதாக்கும் வகையில் நிகழ்நேரத் தரவுப் பரிமாற்றம் செய்யப் படும்.
- வகை 1 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அரசு மருத்துவமனைகளில் ஆண்டு முழுவதும் இலவசமாக இன்சுலின் வழங்கப்படும்.
- ₹6.37 கோடி செலவில் 'இரும்புக் கண்மணி - பள்ளி மாணவிகளுக்கான இரத்த சோகை தடுப்புத் திட்டம்' தொடங்கப்படும்.
- ஹப்-அண்ட்-ஸ்போக் (hub-and-spoke) மாதிரியின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் சுமார் 4.5 லட்சம் குழந்தைகளுக்கு ஏழு அரிய மரபணு நோய்களுக்கான பரிசோதனைகளை மேற்கொள்ளும் பிறந்த குழந்தைகளுக்கான அரிய மரபணு நோய் பரிசோதனை திட்டத்தை தமிழ்நாடு தொடங்கவுள்ளது.
- பிறந்த குழந்தைகளுக்கான இந்தப் பரிசோதனையில் பிறவி தைராய்டு குறைபாடு, பிறவி அட்ரீனல் ஹைப்பர்பிளாசியா, கேலக்டோசீமியா மற்றும் பயோட்டினிடேஸ் குறைபாடு ஆகியவற்றுடன் மற்ற மூன்று அரிய மரபணு நோய்களும் அடங்கும்.

## புதிய மகப்பேறு விடுப்பு விதி

- பெண் அரசு ஊழியர்கள் தங்களின் மூன்றாவது குழந்தைக்கு 12 வாரங்கள் என இருந்த முந்தைய வரம்பை மாற்றி, 365 நாட்கள் மகப்பேறு விடுப்பு அளிக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.
- முந்தைய விதியானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உயிருள்ள குழந்தைகளைக் கொண்ட பெண் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பை 12 வாரங்களாக


வரம்பிட்டிருந்தது.

- இந்த புதிய முடிவின் மூலம் மூன்றாவது குழந்தைக்கு 365 நாட்கள் மகப்பேறு விடுப்பு மீண்டும் வழங்கப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அடிப்படை விதி 101(A)-இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்குப் பிறகு, 12 வார விடுப்பு என்ற முந்தைய விதி அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாநிலத்தில் குறைந்து வரும் கருவுறுதல் விகிதம் மற்றும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு குறித்த தமிழ்நாட்டின் கவலையைத் தொடர்ந்து இந்த மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.




# தேசியச் செய்திகள்

## ஜல் ஜீவன் திட்டத்தின் முன்னேற்றம்




- ஜல் ஜீவன் திட்டம் (JJM) ஏழு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது, மேலும் ஊரகப் பகுதிகளில் குழாய் வழி குடிநீர் இணைப்பு வசதி 2019 ஆம் ஆண்டில் 16.72 சதவீதத்தில் இருந்து 2026 ஆம் ஆண்டில் 82.24 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- தற்போது 15.91 கோடிக்கும் அதிகமான ஊரகக் குடும்பங்கள் குழாய் வழி குடிநீர்

இணைப்புகளைப் பெற்றுள்ளன, இதில் 2019 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட 12.68 கோடி புதிய இணைப்புகளும் அடங்கும்.

- 1.01 லட்சம் கிராம ஊராட்சிகளுடன், 2.04 லட்சம் கிராமங்கள் ஹர் கர் ஜல் (HGJ - அனைத்து வீடுகளுக்கும் குடிநீர்) என சான்றளிக்கப்பட்டுள்ளன.
- மேலும், இத்திட்டத்தின் மூலம் 9.34 லட்சம் பள்ளிகள் மற்றும் 9.73 லட்சம் அங்கன்வாடி மையங்களுக்கும் குழாய் வழி குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.
- ஜல் ஜீவன் திட்டம் 2.0-ஆனது, முறையான சேவைகளை வழங்குதல், நீர் ஆதார நிலைத் தன்மை, மக்கள் பங்கேற்பு மற்றும் நீண்டகாலச் செயல்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்தும்.
- மத்திய அரசு ஜல் ஜீவன் இயக்கத்தை 2028 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை நீட்டித்து உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## பிரிக்ஸ் தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பக் கூட்டம் 2026




- தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்பங்களில் (ICTs) ஒத்துழைப்பிற்கான 7-வது பிரிக்ஸ் பணிக்குழு கூட்டத்தை புனே நடத்துகிறது.
- இந்தக் கூட்டமானது இந்தியாவின் 2026 ஆம் ஆண்டுக்கான பிரிக்ஸ் தலைமையின் கீழ் நடைபெறுகிறது, மேலும் இது டிஜிட்டல் கொள்கை, தொலைத்தொடர்பு மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்துகிறது.
- டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (DPI), டிஜிட்டல் திறன்கள், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப (ICT) புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய டிஜிட்டல் சூழல்கள் குறித்து இதில் விவாதங்கள் நடைபெறுகின்றன.
- செயற்கை நுண்ணறிவு (AI), அடுத்த தலைமுறை தகவல்தொடர்புகள் மற்றும் தொழில்துறை 4.0 (Industry 4.0) பயன்பாடுகள் குறித்த பணிகளை எதிர்கால வலை அமைப்புகளுக்கான பிரிக்ஸ் நிறுவனம் ஆய்வு செய்தது.
- 12-வது தொலைத்தொடர்பு அமைச்சர்கள் கூட்டத்திற்கு முன்னதாக, டிஜிட்டல் பிரிக்ஸ் மன்றம் மற்றும் கண்காட்சி 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 அன்று திட்டமிடப்பட்டுள்ளது.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பிஜியில் எச்.ஐ.வி பரவல்

- உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் மனித நோயெதிர்ப்புச் சக்தி குறைபாடு

வைரஸ் (HIV) பாதிப்புகளில் ஒன்றை பிஜி நாடு எதிர்கொண்டுள்ளது.


- வயது வந்தோரிடையே எச்.ஐ.வி பாதிப்பு 1.6 சதவீதத்தை எட்டியுள்ளது, மேலும் எச்.ஐ.வியுடன் வாழும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே தங்களது பாதிப்பு நிலையை அறிந்துள்ளனர்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் புதிய எச்.ஐ.வி பாதிப்புகள் மும்மடங்காக அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது, அதேவேளையில் போதைப்பொருள் பயன்பாடு, ஊசிகளைப் பகிர்ந்து கொள்வது மற்றும் சமூகக் களங்கம் ஆகியவை இந்த நோய் பரவலுடன் தொடர்புடைய முக்கிய காரணிகளாக உள்ளன.
- பிஜி நாடு 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் எச்.ஐ.வி பரவலை அதிகாரப்பூர்வமாக அறிவித்ததுடன், தேசிய எச்.ஐ.வி பரவல் தடுப்பு சிறப்பு அதிரடிப்படையையும் அமைத்துள்ளது.
- பிஜி நாடு எச்.ஐ.வி முன்காப்பு சிகிச்சை (PrEP) முறையை விரிவுபடுத்துகிறது, மேலும் உலகளாவிய நிதியத்தின் (Global Fund) மூலம் லெனகாபவிர் (Lenacapavir) என்ற நீண்ட காலம் செயல்படக் கூடிய ஊசி மூலம் செலுத்தப்படும் எச்.ஐ.வி தடுப்பு மருந்தை பெற உள்ளது.




## அசாதாரண கருந்துளை கண்டுபிடிப்பு

- ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியை (JWST) பயன்படுத்தி, பிரபஞ்சம் சுமார் 660 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாக இருந்தபோது உருவான ஒரு அசாதாரண கருந்துளையை சர்வதேச வானியலாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.
- இந்த விண்பொருள் 'லிட்டில் ரெட் டாட்ஸ்' (LRDs) வகைகளில் ஒன்றாகும், மேலும் இது ஹைட்ரஜன் வாயுவின் ஒரு பெரிய கூட்டத்தால் சூழப்பட்ட அதிவேகமாக வளரும் கருந்துளையாகத் தோன்றுகிறது.
- முன்பு கருதப்பட்டதைப்போல தூசியால் அல்லாமல், அடர்த்தியான வாயு காரணமாகவே இந்த சிவப்பு நிறம் ஏற்பட்டிருக்கலாம் என அவதானிப்புகள் கூறுகின்றன.

- ஆரம்பகாலப் பிரபஞ்சத்தில் சில கருந்துளைகள் எவ்வாறு மிக வேகமாக வளர்ந்தன என்பதை விளக்க இந்த வாயுக்கூட்டம் உதவக்கூடும்.
- இந்தக் கருந்துளையைச் சுற்றி பல மில்லியன் கிலோமீட்டர் பரப்பளவிற்கு ஒரு கன சென்டிமீட்டருக்கு சுமார் 100 பில்லியன் துகள்களைக் கொண்ட ஹைட்ரஜன் வாயு சூழ்ந்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### UNCCD COP17 – மங்கோலியா




- பாலைவனமாதலை தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் (UNCCD) 17-வது தரப்பினரின் மாநாடு (COP17) மங்கோலியாவின் உலான்பாதரில் தொடங்கியது.
- ரியாத்தில் நடைபெற்ற COP16 மாநாட்டில் சட்டப்பூர்வமாக பிணைக்கக்கூடிய

ஒப்பந்தத்தில் உடன்படத் தவறியதைத் தொடர்ந்து, உலகளாவிய வறட்சிக் கட்டமைப்பு குறித்து நாடுகள் தற்போது விவாதித்து வருகின்றன.

- ❖ உலகளவில் 1.5 முதல் 2 பில்லியன் ஹெக்டேர் நிலம் சீரழிந்துள்ளதாக மதிப்பிடப் பட்டு உள்ள நிலையில், சுமார் 1 பில்லியன் ஹெக்டேர் சீரழிந்த நிலங்களை மீட்டெடுக்க நாடுகள் உறுதியளித்துள்ளன.
- ❖ இந்த மாநாடு வறட்சி மற்றும் நில சீரழிவைச் சமாளிப்பதற்கான நிதி, தொழில்நுட்பம் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- ❖ தமது நாட்டின் நிலப்பரப்பில் 77 சதவீதம் பாலைவனமாதல் மற்றும் நில சீரழிவால் பாதிக்கப் பட்டுள்ளதாக மங்கோலியா தெரிவித்துள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## தொழில்முறை சேவைகள் குறித்த நிதி ஆயோக் அறிக்கை




- ❖ தொழில்முறை சேவைகளுக்கான இந்தியாவின் ஒழுங்குமுறைக் கட்டமைப்பு குறித்த அறிக்கையை நிதி ஆயோக் வெளியிட்டது.
- ❖ இந்த அறிக்கை சட்டம், கணக்கியல், கட்டிடக்கலை, பொறியியல் மற்றும் சுகாதாரச் சேவைகளை உள்ளடக்கியது.
- ❖ தொழில் வல்லுநர்களின் இயக்கம் மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை பாதிக்கும் ஒழுங்குமுறை பிளவுகள் மற்றும் கட்டுப்பாடுகளை இது எடுத்துக் காட்டுகிறது.
- ❖ 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய சேவைகள் ஏற்றுமதியில் 4.3 சதவீத பங்களிப்புடன், சேவைகள் ஏற்றுமதி செய்யும் 7-வது பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.
- ❖ ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பு, பரந்த அளவிலான பரஸ்பர அங்கீகார ஒப்பந்தங்கள் (MRAs), தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு (CPD) மற்றும் நவீன வணிக கட்டமைப்புகள் ஆகியவற்றை நிதி ஆயோக் பரிந்துரைக்கிறது.
- ❖ உயர் மதிப்புமிக்க சேவைகள் ஏற்றுமதியை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு (AI), தானியக்கமாக்கல் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்தவும் இது பரிந்துரைக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## ஆயுஷ்மான் பாரத் திட்டம் - மேற்கு வங்கம்

- ஆயுஷ்மான் பாரத் பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY) திட்டத்தை செயல்படுத்தும் 36-வது மற்றும் இறுதி மாநிலமாக மேற்கு வங்கம் மாறியதன் மூலம், நாடு தழுவிய இதன் அமலாக்கம் முழுமையடைந்துள்ளது.
- தகுதியான பயனாளிகளுக்கு இத்திட்டம் குடும்பத்திற்கு ஆண்டுக்கு ₹5 லட்சம் வரையிலான சுகாதாரக் காப்பீட்டை வழங்குகிறது.
- இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக தேசிய சுகாதார ஆணையம் (NHA) மற்றும் மேற்கு வங்க அரசு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தானது.
- இத்திட்டத்தின் கீழ் 36,000-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- நாடு முழுவதும் 44 கோடிக்கும் அதிகமான ஆயுஷ்மான் அட்டைகள் வழங்கப் பட்டு உள்ளன.
- இத்திட்டம் தொடங்கப்பட்டதில் இருந்து, சுமார் ₹1.82 லட்சம் கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள 12 கோடிக்கும் மேற்பட்ட சிகிச்சைகளைப் பயனாளிகள் பெற்றுள்ளனர்.




## எரிக் பட்டு நெசவு மையம்




- மேகாலயா மாநிலம் ரி-போய் மாவட்டம் நாங்போவில் எரிக் பட்டு நெசவுக்கான

திறன்மிகு மையத்தை (CoE) மேகாலயா முதலமைச்சர் கான்ராட் கே. சங்மா திறந்து வைத்தார்.

- இந்த மையம் எரிக் பட்டு நெசவின் பாரம்பரிய திறனைப் பாதுகாக்கவும், அதனை எதிர்கால சந்ததியினருக்குக் கடத்தவும் உதவும்.
- ரைண்டியா (Ryndia) என்றும் அழைக்கப்படும் எரிக் பட்டு, மேகாலயாவின் பாரம்பரிய கைத்தறி நெசவு ஜவுளியாகும்.
- மேகாலயாவின் கலாச்சார அடையாளம் மற்றும் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் கைத்தறி வண்ணங்கள், வடிவங்கள் மற்றும் வடிவமைப்புகளுக்கு எரிக் பட்டு பெயர் பெற்றது.
- இந்தத் திறன்மிகு மையம் நெசவு மற்றும் கைத்தறி நடவடிக்கைகளில் திறன் மேம்பாடு மற்றும் புதுமைகளை ஊக்குவிக்கும்.

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய விளையாட்டு விருதுகள் 2025




- இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகமானது தேசிய விளையாட்டு விருதுகளை அறிவித்தது.
- 2025 ஆம் ஆண்டிற்கான மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருதுக்கு எந்த வீரரும் / வீராங்கனையும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.
- விதித் குஜராத்தி மற்றும் திவ்யா தேஷ்முக் (செஸ்), தேஜஸ்வின் சங்கர் (தடகளம்), காயத்ரி கோபிசந்த் மற்றும் ட்ரீசா ஜாலி (பேட்மிண்டன்) உள்ளிட்ட 17 விளையாட்டு வீரர்களுக்கு அர்ஜுனா விருது வழங்கப்பட்டது.
- முன்னாள் கால்பந்து வீரரும் பயிற்சியாளருமான ஐ. அருமைநாயகம் அர்ஜுனா விருதினை (வாழ்நாள்) பெற்றார்.
- பர்பீர் சிங் (தடகளம்), சோட்டே லால் யாதவ் (குத்துச்சண்டை), நேஹா நந்தகுமார்

சவான் (துப்பாக்கிச் சுடுதல்), தர்மேந்திர சிங் யாதவ் (குத்துச்சண்டை), மற்றும் வீரேந்தர் குமார் (மல்யுத்தம்) ஆகியோருக்கு துரோணாச்சார்யா விருது வழங்கப் பட்டது.

❖ விளையாட்டை மேம்படுத்தியதற்காக புனேவில் உள்ள ராணுவ பாராலிம்பிக் நோட் அமைப்பு (Army Paralympic Node), ராஷ்ட்ரிய கேல் புரோட்சஹான் புரஸ்கார் விருதைப் பெற்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★